

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (10.11.2024) விருதுநகரில் நடைபெற்ற அரசு விழாவில், பல்வேறு துறைகளின் சார்பில் 417 கோடியே 21 இலட்சம் ரூபாய் மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை 57,556 பயனாளிகளுக்கு வழங்கினார். இந்த நிகழ்ச்சியில், பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ். எஸ்.ஆர். ராமச்சந்திரன், நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி. கணேசன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாணிக்கம் தாகூர், நவாஸ் கனி, திருமதி ராணி ஸ்ரீகுமார். சட்டமன்ற உறுப்பினர்கள் எ.ஆர்.ஆர். சீனிவாசன், எஸ். தங்கபாண்டியன், ஏ.ஆர்.ஆர். ரகுராமன், வருவாய் நிர்வாக ஆணையர் / கூடுதல் தலைமைச் செயலாளர் ராஜேஷ் லக்கானி, பொதுப்பணித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத் ராம் சர்மா. வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை முதன்மைச் செயலாளர் திருமதி பெ.அமுதா, விருதுநகர் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் வீ.ட. ஜெயசீலன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (10.11.2024) மதுரை விமான நிலையத்தில், மதுரை மாவட்டம், திருவேங்கடம் கிராமத்தைச் சேர்ந்த மாணவி செல்வி ஷோபனா சந்தித்து, குடும்ப சூழ்நிலை காரணமாக உயர்கல்வி பயில இயலாத நிலை குறித்து 2021–ஆம் ஆண்டு முதலமைச்சர் அவர்களுக்கு கடிதம் எழுதியதற்கு உடனடியாக நடவடிக்கை எடுத்து மதுரை – ஸ்ரீ மீனாட்சி அரசினர் மகளிர் கல்லூரியில் தான் பயில ஏற்பாடு செய்து, புத்தகங்கள் மற்றும் நிதியுதவி வழங்கி உதவி செய்ததற்கும், தற்போது பட்டப்படிப்பு முடித்தவுடன் மதுரை தொழிலாளர் நலத்துறை உதவி ஆணையர் அலுவலகத்தில் (சமூக பாதுகாப்பு திட்டம்) கணினி உதவியாளராக வேலைவாய்ப்பு பெற்றிட உதவியதற்காகவும் நன்றி தெரிவித்துக் கொண்டார். உடன் அவரது குடும்பத்தினர் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (10.11.2024) விருதுநகரில், ந. சுப்பையாபுரம் அரசு மேல்நிலைப்பள்ளியில் சிலப்பதிகாரம் முற்றோதல் செய்த மாணவிகளை பாராட்டியும், அவர்களுக்கு பயிற்சி அளித்த மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் கரிசல் இலக்கிய கழக தலைவர் முனைவர் வீ.ப. ஜெயசீலன், கரிசல் இலக்கிய கழக செயலாளர் மரு. அறம் மற்றும் ஆசிரியர்களை பாராட்டியும் வாழ்த்து தெரிவித்தார். இந்நிகழ்வின்போது, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு ஆகியோர் உடனிருந்தனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (10.11.2024) விருதுநகரில், ஊரக வளர்ச்சித் துறை, நெடுஞ்சாலைத் துறை மற்றும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம் ஆகிய துறைகளில் புதுமையாகவும் சிறப்பாகவும் பணியாற்றிய மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் மரு. இரா. தண்டபாணி, நெடுஞ்சாலைத் துறை கோட்ட பொறியாளர் திருமதி பாக்கியலட்சுமி, தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியத்தின் செயற்பொறியாளர் ஜி. ராமராஜ் மற்றும் பொறியாளர்களை பாராட்டி வாழ்த்து தெரிவித்தார். இந்நிகழ்வின்போது, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னாக, விருதுநகர் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் வீ.ப. ஜெயசீலன், ஆகியோர் உடனிருந்தனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (10.11.2024) விருதுநகரில், தமிழ்நாடு பட்டாசு மற்றும் கேப் வெடி உற்பத்தியாளர் சங்கத்தின் தலைவர் கணேசன் பஞ்சுராஜன், துணைத் தலைவர் அபி ரூபன், செயலாளர் பாலாஜி பவநாசம், இந்தியன் பட்டாசு உற்பத்தியாளர் சங்கத்தின் தலைவர் ஸ்ரீராம் அசோக், செயலாளர் கண்ணன் மற்றும் நிர்வாகிகள் சந்தித்து, ஒரு முறை மட்டுமே பயன்படுத்தக் கூடிய குறைவான விலை கொண்ட பிளாஸ்டிக் சிகரெட் லைட்டர்களுக்குக் கடந்த ஆண்டு ஒன்றிய அரசு தடை விதித்ததைத் தொடர்ந்து, தற்போது சீனாவிலிருந்து சிகரெட் லைட்டர்களின் தயாரிப்புக்கான உதிரிபாகங்களின் இறக்குமதிக்கும் ஒன்றிய அரசு அண்மையில் தடை விதித்துள்ளதற்கு, ஒன்றிய அரசை வலியுறுத்தி தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டதற்காகவும் நன்றி தெரிவித்து கொண்டு கோரிக்கை மனு அளித்தனர்.

முதலமைச்சரிடம் கோரிக்கை மனு அளித்த மாற்றுத்திறனாளி பட்டதாரி;

# வாகனத்தில் இருந்து இறங்கி வந்து மனுவைப் பெற்றுக்கொண்ட முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்!

பட்டாசு ஆலை ஆய்வுக்கு வந்த முதல்வரைக் காண ஆலையின் வெளியே தூய்மைப் பணியாளர்கள், பட்டாசுத் தொழிலாளர்கள் மற்றும் ஏராளமான பொதுமக்கள் காத்திருந்தனர்.

முதல்வரை நேரில் சந்தித்து மனு கொடுக்க திருவில்லிபுத்தூரிலிருந்து மணிகண்டன் என்ற மாற்றுத்திறனாளி வீல்சேரில் காத்திருந்தார். ஆய்வு முடித்து முதல்வர் வெளியே வரும்போது இதனைக் கண்டார். உடனே காரை விட்டு இறங்கி மாற்றுத் திறனாளி மணிகண்டன் அருகில் வந்து, அவர் வைத்திருந்த மனுவை நேரடியாகப் பெற்றுக்கொண்டு குறைகளை கேட்டறிந்து, உரிய நடவடிக்கைக் எடுக்கப்படும் என்று முதல்வர் அவர்கள் உறுதியளித்தார்.









முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் (10–11–2024) விருதுநகரில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் விருதுநகர் மாவட்டம், மகப்பேறு இறப்பு இல்லாத மாவட்டமாக விருது பெற சிறப்பாக பணியாற்றிய மருத்துவர்கள் – கன்னிசேரி புதூர் வட்டார மருத்துவ அலுவலர் மரு. ஆரோக்கிய ரூபன்ராஜ், வெம்பக்கோட்டை வட்டார மருத்துவ அலுவலர் மரு.செந்தட்டிகாளை, நரிக்குடி வட்டார மருத்துவ அலுவலர் மரு. லஜா ஜெசிகா மற்றும் துறை மருத்துவர்கள் மற்றும் பணியாளர்களை பாராட்டி வாழ்த்துத் தெரிவித்தார். இந்நிகழ்வின்போது, அமைச்சர்கள் கே.கே.எஸ். எஸ்.ஆர். இராமச்சந்தி ரன், தங்கம் தென்னரசு, மாவட்ட ஆட்சியர் முனைவர் வீ.ப.ஜெயசீலன் ஆகியோர் உடன் இருந்தனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (10.11.2024) விருதுநகரில், காவிரி – வைகை – கிருதுமால் – குண்டாறு பாசன விவசாயிகள் கூட்டமைப்பின் மாநிலத் தலைவர் மிசா ச.மாரிமுத்து, செயலாளர் எம்.அர்ச்சுணன் மற்றும் நிர்வாகிகள் சந்தித்து, காவிரி – வைகை – குண்டாறு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருவதற்காக நன்றி தெரிவித்துக் கொண்டு, கோரிக்கை மனு அளித்தனர். இந்நிகழ்வின்போது, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, விருதுநகர் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் வீ.ப. ஜெயசீலன், ஆகியோர் உடனிருந்தனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (10.11.2024) விருதுநகரில், விருதுநகர் மாவட்டத்தில் உயர்கல்வி மாணவர் சேர்க்கையை உயர்த்தியமைக்காக 2024–ஆம் ஆண்டிற்கான நல்லாளுமை விருது பெற மாவட்ட அளவில் சிறப்பாக பணியாற்றிய மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் மரு. இரா.தண்டபாணி, மாவட்ட வழங்கல் மற்றும் பாதுகாப்பு அலுவலர் திருமதி த.அனிதா, மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் எஸ்.அசோக்குமார் மற்றும் பணியாளர்களை பாராட்டி வாழ்த்து தெரிவித்தார். இந்நிகழ்வின்போது, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, விருதுநகர் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் வீ.ப. ஜெயசீலன் ஆகியோர் உடனிருந்தனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (10.11.2024) விருதுநகரில், விருதுநகர் மாவட்ட அரசு விழாவில் முதலமைச்சர் அவர்கள் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவிற்கு அதிக அளவு பயனாளிகளுக்கு பட்டாக்கள் வழங்க சிறப்பாக பணியாற்றிய மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் கூடுதல் மாவட்ட நிர்வாக நடுவர் இரா. ராஜேந்திரன், சிவகாசி சார் ஆட்சியர் திருமதி ப்ரியா ரவிச்சந்திரன் மற்றும் பணியாளர்களை பாராட்டி வாழ்த்து தெரிவித்தார். இந்நிகழ்வின்போது, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, விருதுநகர் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் வீ.ப. ஜெயசீலன் ஆகியோர் உடனிருந்தனர்.